# இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் சேமலாப நிதியம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் சேமலாப நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 பெறவேண்டிய கணக்குகள்

பல வருடங்களுக்கு முன்னர் இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் சேமலாப நிதியத்தின் பணம், முதலீடு செய்யப்பட்ட நிதி நிறுவகத்தினால் உரிய முதலீட்டு வருமானத்திலிருந்து குறித்த அளவிற்கு மிகையாக ரூபா 191,095 தொகை பிடித்துவைத்தல் வரியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அந்த மிகையாக அனுப்பிவைக்கப்பட்ட பணத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரையும் ரூபா 61,789 தொகை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவு வருமான வரிக்கு முன்னர் ரூபா 6,917,457 மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5,038,341 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பு ரூபா 1,879,116 ஆகக் காணப்பட்டது. நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பிற்காக திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி வருமானம் ரூபா 1,818,142 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் சேமலாப நிதியமானது நிரந்தர உத்தியோகத்தர்களின் மாதாந்த உழைப்பில் இருந்து அறவிடப்படும் 10 சதவீதமான பங்களிப்புத் தொகையையும் பல்கலைக்கழகத்தினால் அந்த உழைப்புகளில் இருந்து செலுத்தப்படும் 15 சதவீதமான பங்களிப்புத் தொகையையும் உள்ளடக்கியுள்ளது. அப்பணத்தை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கும் ஊழியர்களுக்கு கடன் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நிதியத்தின பங்களிப்பு கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட வட்டி மீளாய்வாண்டில் ரூபா 6,142,288 ஆனதுடன் முன்னைய ஆண்டின் போது இது ரூபா 4,526,821 ஆனமையால் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் 35.6 சதவீத அதிகரிப்பைக் காண்பித்திருந்தது.

### 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் முதிர்ச்சியடைந்திருந்த ரூபா 72,900,000 கூட்டுத்தொகையான முதலீட்டினை மீள முதலீடு செய்வதற்கு தாமதித்ததன் காரணமாக நிதியம் ரூபா 643,606 தொகையான வட்டி வருமானத்தை இழந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் பல்வேறு காரணங்களினால் உரிய 08 நலன்பெறுனர்களுக்கு ரூபா 2,441,346 தொகையான கொடுப்பனவுகள் தாமதமாகியிருந்தன.

(இ) 2012 திசெம்பர் 05 ஆம் திகதி ஓய்வுபெற்ற ஒரு உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,186,834 தொகையான சேமலாப நிதியத்தின் மீதி அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவின் பிரகாரம் 03 மாதங்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2013 ஏப்ரல் வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. கட்டுப்பாட்டுச் சபையால் விதிக்கப்படும் கட்டளை இல. 06 இன் பிரகாரம் பங்களிப்பாளர் ஓய்வுபெறும் போது கணக்கை மூட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ஈ) கட்டுப்பாட்டுச் சபையால் விதிக்கப்பட்ட கட்டளை இல. 09 இன் பிரகாரம், ஒவ்வொரு ஆண்டின் இறுதியின் போதும் கட்டுப்பாட்டுச் சபையால் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் விசாரித்து அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுவட்டி நிர்ணயிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது இதற்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது மஹோஉபாத்யாயன் வஹன்ஸே அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பது அவதானிக்கப்பட்டது.